# பத்திரிகைச் செய்தி வெளியீடு

அட்டர்னி ஜெனரல்
அமைச்சகம்

உடனடி வெளியீட்டுக்காக
15 நவம்பர், 2006

**மெக்கின்டி அரசு, ஒன்டாரியோவில் மனித உரிமைச் சட்டங்களை வலுப்படுத்த உள்ளது**
*உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அமைப்பை விளக்குவதற்கான திருத்தங்கள்*

டொரோன்டோ - மெக்கின்டி அரசு, 2006ஆம் ஆண்டின் மனித உரிமைகள் சட்ட திருத்தச் சட்டத்தினை (Human Rights Code Amendment Act, 2006) மேலும் வலுப்படுத்தவும் தெளிவுபடுத்தவும் 107ஆம் சட்ட வரைவுக்கு திருத்தங்களை முன்வைக்கிறது என்று அட்டர்னி ஜெனரல் மைக்கேல் பிரையன்ட் இன்று அறிவித்தார்.

"மனித உரிமைகளை மேம்படுத்துவது, பாகுபாடுகளை எதிர்ப்பது, பாதிப்புக்கு ஆளாகக்கூடியவர்களை பாதுகாப்பது ஆகியவற்றில் ஒன்டாரியோ தொடர்ந்து முன்னிலை வகிப்பதை நாம் உறுதி செய்ய விரும்புகிறோம்" என்றார் திரு பிரையன்ட். "மேற்கொள்ளப்பட்டு வரும் ஆலோசனைகள், சட்டக் குழு விசாரணை அமர்வுகள், ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் பார்பரா ஹால் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்புகள் ஆகியவற்றில் கிடைத்த கருத்துகளுக்கு எமது உத்தேசிக்கப்பட்டுள்ள 107ஆம் சட்ட வரைவுத் திருத்தம் பதிலளிக்கிறது. உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டம் நமது மனித உரிமைகள் அமைப்பை மேலும் வலுப்படுத்தும், விரைவுபடுத்தும், கூடுதல் பயன் தரும்."

2006ஆம் ஆண்டின் மனித உரிமைகள் சட்ட திருத்தச் சட்டத்தின் 107ஆம் வரைவுச் சட்டத்திற்கு அரசு முன்வைக்க உத்தேசித்துள்ள திருத்தங்களில் இவையும் அடங்கும்:

- பொது நிதியைக் கொண்டு புதிதாக மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையம் (Human Rights Legal Support Centre) ஒன்றை உருவாக்குவது உள்பட, ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்திடம் (Human Rights Tribunal of Ontario) நிவாரணம் கோருவோருக்கு உதவுவதற்காக பலவகையான சட்ட ஆதரவுச் சேவைகளை உறுதி செய்வது
- மனித உரிமைகள் பிரச்சினைகளை விசாரிப்பதில் ஆணையத்துக்கு உள்ள அதிகாரத்தையும், தீர்ப்பாயத்தின் முன் உள்ள எல்லா விஷயங்களிலும் ஆணையம் தலையிடுகிற அதிகாரத்தையும் வலுப்படுத்துவது
- ஆணையம் தனது சொந்த முடிவுப்படியும், பொது நலனின் அடிப்படையிலும் இயங்குவதற்கான சுதந்திரத்தை உறுதி செய்வது. இதில், ஒன்டாரியோ மக்களுக்கு நேரடியாக பதிலளிப்பதும் அடங்கும்
- நடைமுறைகளில் நியாயப் பாங்கு மற்றும் முடிவு எடுப்பதில் ஒளிவுமறைவின்மையை உறுதி செய்வதற்காக தீர்ப்பாயத்திற்கான அதிகாரங்களை தெளிவுறுத்துவது
- ஆணையத்துக்கும் தீர்ப்பாயத்துக்கும் ஆட்களை நியமிக்க திறமையின் அடிப்படையிலான தகுதிகளை வரையறுப்பது
- கட்டணங்கள் நிர்ணயிக்கவும் வசூலிக்கவும் தீர்ப்பாயத்துக்கு உள்ள வசதியை நீக்குவது

- நிவாரணம் கோரும் மனுவிற்கான காலவரம்பு ஆறு மாதங்கள் என்பதை ஒரு ஆண்டு என நீட்டிப்பது
- நடப்பில் உள்ள புகார்களை புதிய அமைப்பின்கீழ் தீர்ப்பதற்கேற்ப, மாற்றகட்டத்துக்கான வகையுரைகளை சரிசெய்வது.

“நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் இந்தத் திருத்தங்கள் ஒன்டாரியோவில் மனித உரிமைகளை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் மேலும் உறுதியான அமைப்பை வழங்கும் என நம்புகிறேன்,” என்றார் ஹால். “இந்த சட்ட வரைவு, அமைப்புசார்ந்த பெரிய பிரச்சினைகளுக்கு சுயமுனைப்பான, கொள்கைசார்ந்த அணுகுமுறையை மேற்கொள்வதற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க வாய்ப்பை ஆணையத்துக்கு வழங்குகிறது. சட்ட வரைவுத் திருத்தங்கள் விஷயத்திலும், புதிய அமைப்புக்கான மாற்றம் சுமுகமான முறையில் நடைபெறுவதை உறுதி செய்வதிலும் அட்டர்னி ஜெனரல், தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் அனைவருடனும் இணைந்து பணியாற்ற உறுதி கொண்டுள்ளேன்” என்றார் அவர்.

“தீர்ப்பாயத்தின் நடைமுறைகள் நியாயமாகவும் தாமதமின்றியும் நடைபெறுவதை உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தத் திருத்தங்கள் உறுதி செய்கின்றன,” என்றார் தீர்ப்பாயத்தின் தலவர் மைக்கேல் கோத்தெய்ல். “சட்ட வரைவு நிறைவேறுமானால், தீர்ப்பாயத்தின் விதிகள் மற்றும் நடைமுறைகள் பற்றி பொதுமக்களின் ஆலோசனை பெற உத்தேசித்துள்ளேன்.”

“மனித உரிமைகள் திருத்தக் கோப்பில் இன்னும் ஏராளமான அறிக்கைகளை சேர்க்காமல் உறுதியான நடவடிக்கை எடுத்ததற்காக நாங்கள் அரசைப் பாராட்டுகிறோம்,” என்றார் மைக்கேல் ஷ்ரையர், செயல் இயக்குநர், காதாம்-கென்ட் பாலியல் வன்முறைத் தடுப்பு மையம். “பெண்களுக்கு கால தாமதமற்ற விசாரணையை அணுகுவதற்கான வசதி கிடைப்பதையும், தமது உரிமைகள் நடைமுறைப்படுத்தப்படுவதையும் உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டம் உறுதி செய்யும்.”

“உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தத் திருத்தங்கள், ஒன்டாரியோவில் மனித உரிமைகள் அமைப்பு ஆற்றல் வாய்ந்ததாக, பயனுடையதாக, அணுகுவதற்கு எளிதானதாக ஆவதை இன்னும் எளிதாக்கும்” என்றார் ரேவா டெவின்ஸ், முன்னாள் மனித உரிமைகள் ஆணையர். “இந்த முக்கியமான நடவடிக்கைகளை எடுத்ததற்காக அரசைப் பாராட்ட வேண்டும்” என்றார் அவர்.

“நமது மனித உரிமைகள் அமைப்புக்கான சீர்திருத்தம் மெதுவாகவே வந்திருக்கிறது; ஆயினும் மேலும் ஆய்வுகள் செய்வதற்கான நேரம் முடிந்து விட்டது,” என்றார் ராஜ் ஆனந்த், ஆணையத்தின் முன்னாள் தலைவர். “உத்தேசிக்கப்பட்டுளள இந்த திருத்தங்களின் மூலம் பல ஆண்டுகளின் ஆய்வுகளை, அறிக்கைகளை, பரிந்துரைகளை அட்டர்னி ஜெனரல் நடைமுறைப் படுத்துகிறது. அர்த்தமுள்ள மற்றும் பயனுள்ள மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதில் மெக்கின்டி அரசு காட்டிய தைரியத்தை நான் பாராட்டுகிறேன்.”

மெக்கின்டி அரசாங்கம், ஒன்டாரியோவில் மிகவும் பாதிக்கப்படுபவர்களின் பக்கம் நிற்கிறது. அதனால்தான் பாகுபாடுகளைத் தடுக்கவும், புகார்களை நியாயமாகவும் மேலும் திறனுடனும் தீரக்கவும் ஒன்டாரியோ மனிதஉரிமைகள் அமைப்பை நவீனப்படுத்த உத்தேசித்துள்ளது. இதற்கான இதர முயற்சிகளில் இவையும் அடங்கும்:

- ஊனங்கள் உடைய ஒன்டாரியோவாசிகளுக்கு அணுகல் வசதிச் சட்டம், 2006ஐ நிறைவேற்றுவது

- வெறுப்பின் காரணமாக நிகழ்த்தப்படும் குற்றங்களால் பாதிக்கப்படுபவர்களுக்கான சேவைகளை மேம்படுத்தவும், பாதிப்புக்கு ஆளாவதைத் தடுக்கவும் வெறுப்புக் குற்றத் தடுப்புக்கான சமூக வேலைக் குழு (Hate Crimes Community Working Group) ஒன்றை அமைப்பது
- சட்டம் ஒன்றை அறிமுகம் செய்வது – இது நிறைவேறினால், காவல்துறை செயல்பாடு பரிசீலனைக்கு உள்ளாக்கப்படும், காவல்துறையில் புதிய புகார் அமைப்பை நிர்வகிப்பதற்காக சுயேச்சையான பொதுமக்கள் குழு ஒன்று நிறுவப்படும்.

- 30 -

தொடர்புகள்:
கிரெக் க்ரோன் (Greg Crone)
அட்டர்னி ஜெனரல் அமைச்சகம்
அமைச்சு அலுவலகம் (Minister's Office)
*(416) 326-1785*

பிரெண்டன் கிராலி (Brendan Crawley)
தொடர்புப் பிரிவு (Communications Branch)
*(416) 326-2210*

www.attorneygeneral.jus.gov.on.ca

பொதுவான தொலைபேசி விசாரணைகள்: 416-326-2220 or 1-800-518-7901

பார்வைத்திறன் இழந்தவர்கள் மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண்களை அழைத்து, இந்த ஆவணத்தின் உரையைக் கேட்கலாம்.

TTY: 416-326-4012

இந்த ஆவணம் 14 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படுகிறது

இதன் மொழியாக்கம் விரைவில் கிடைக்கும்: www.attorneygeneral.jus.gov.on.ca